# மனிதநேயச் சிந்தனைகள்

பேரா ர.சூர்யா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதி),
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

மனிதனுக்குரிய உயரிய பண்புகளுள் ஒன்று மனிதநேயம். இம்மனிதநேயமே மனித இனத்தை விலங்குகளிடமிருந்து பிரித்துக்காட்டுகிறது. மனிதன் என்பவன் அடிப்படையில் அன்பையும் அறிவையும் பெற்றுத்திகழக் கூடியவன். எவனிடம் அன்பு என்ற குணம் இல்லையோ அவன் மனிதநேயத் தன்மையை இழக்கிறான். மனிதன் மனிதன்மீதும் உலக உயிர்கள்மீதும் காட்டக்கூடிய அன்பின் தன்மையையே மனித நேயம் என்கிறோம். இத்தகு பெருமைக்குரிய, சிறப்புப் பொருந்திய மனிதநேயம் குறித்த செய்திகளை எடுத்தாள்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**மனிதநேயம்**

மனிதன் + நேயம் = மனிதநேயம் ஆகும். மனித நேயம் என்பது மனிதன்மீது மனிதன் காட்டுவதும் மனிதன் பிற உயிர்கள்மீது அன்பு செலுத்துவதையுமே குறிக்கிறது. உலகில் தோன்றிய உயிர்களில் மனித இனமே மிக உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் மனிதனுக்கு மட்டுமே பகுத்தறியும் ஆறாவது அறிவு அமைந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர்,

**"ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே**
**நோதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"**

எனும் நூற்பாவில் கூறியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் ஔவையாரின்,

**"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது"**

என்ற வரியின்மூலம் மானிடச் சிறப்பை உணர்த்துகிறார்.

**அன்பு**

அன்பு என்பது மனிதனுக்குத் தேவைப்படக்கூடிய ஒன்று. அவ்வன்பினைப் பிறர்மீது காட்டுவதைப் போலவே பகைவர்மீதும் அன்பு செய்ய வேண்டும் என்பதை,

**"உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள்**
**உங்களை வெறுப்போர்க்கு நன்மை செய்யுங்கள்**
**உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு**
**பிறரைத் தீர்ப்பு இடாதீர்கள் கண்டனம்**
**செய்யாதீர்கள் மன்னியுங்கள்"**

என்ற பாடல் வரிகளின்மூலம் மனிதர்கள் அனைவரிடமும் அன்போடும், மன்னிக்கும் குணத்தோடும் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதை அறியமுடிகிறது. மேலும்,

**"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று"**

என்ற குறட்பாவின்மூலம் பட்ட மரத்தின் தளிர் எவருக்கும் பயன்படுவதில்லையோ, அதைப்போல அன்பு இல்லாத மனிதன் எவருக்கும் பயனில்லை என்பதை திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளதன்மூலம் உணரமுடிகிறது. அன்பின் பேராற்றலை,

**"அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவமானது ஆகும் அறிகிலார்"**

என்ற திருமந்திரத்தின் பாடல்வரிகள் மனித வாழ்விற்கும் மெய்ஞானத்திற்கும் கலங்கரை

விளக்கம் போல அமைந்திருக்கின்றன என்பதை உணரமுடிகிறது.

**சீவகாருண்யம்**

சீவகாருண்யம் என்பது அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ளுதல் என்ற பொருளைத் தருகிறது. கடவுளின் அருளைப் பெற வள்ளலாரோ, சீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்று புதிய கோஷத்தை எழுப்ப, அதற்கு வினாவையும், விடையையும் தருகிறார். சிறிய விளக்கைக் கொண்டு பெரிய விளக்கை எரிப்பது போல சிவ தயவைக்கொண்டு சீவ தயவை அடைவதுதான் சீவகாருண்யம் ஆகும் என்று வள்ளலார் குறிப்பிடுவதை,

**"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம் முயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர் அவர் உளந்தான்**
**............. ......................... ............**
**சிந்தைமிகு விழைத்ததாலோ"**

(திருவருட்பா 6 ஆம் திருமுறை பா. 5297)

என்ற பாடல் வரிகளின் மூலம், எந்தவொரு உயிரையும் தன்னைப்போல் பாவித்து அதன்மீது அன்பு, கருணை காட்டுவதன்மூலம் இறைவனின் அருளை அடைய முடியும் என்பதை உணரமுடிகிறது.

**கொல்லா விரதம்**

கொல்லா விரதம் மேற்கொள்வதில் சமணர் பௌத்தர் மிகத்தீவிரமாக இருந்தனர். புலால் உண்ணுதலை மிகவும் கண்டித்தனர். இவர்கள் மேற்கொண்டது ஜ"வ இம்சை செய்யாமை என்பது மட்டுமே. ஆனால் தாயுமானவர், வள்ளலார் போன்றோர் கொல்லாமை மட்டுமல்ல சீவகாருண்யம், அவ்வுயிர்கள்மீது இரக்கம் கொள்வதும் இணைந்து இருப்பதைத்தான் சீவகாருண்யம் என்று வலியுறுத்துகின்றனர். இதனைத் தாயுமானவர்,

**"எவ்வுயிரும் என்னுயிர்போல்**
**எண்ணி இரங்கவும் நின்**
**தெய்வ அருட்கருணை செய்யாய்**
**பராபரமே..."**

என்றும்,

**"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றும் அறியேன்**
**பராபரமே"**

(பராபரக்கண்ணி, பா.65,221)

என்ற பராபரக்கண்ணிகள் மூலம் தனது கொல்லா விரதத்தைப் பறைசாற்றுகிறார். இதேபோல சாந்தலிங்க அடிகளாரும் "கொலை மறுத்தல்" என்ற நூலின் மூலம் எவ்வுயிரையும் கொலை செய்தல் கூடாது என்று வற்புறுத்துகிறார்.

தாவரங்களும் உயிர்களில் ஒன்றுதானே. அதனை உண்பது சீவகாருண்யம் ஆகுமா? என்று வினவேன். ஓர் மூலமாகிய தாவரத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தாவரத்தின் இலை, காய் கனி, பூ போன்றவற்றை மட்டுமே உண்பதால் இதனைக் கொல்லாமை அன்று என்று உணரவேண்டும். ஆனால் ஓர் உயிரைக் கொன்று ஒண்ணும் செயல் என்பது சீவகாருண்யம் அல்லாத செயலாகும். அதாவது ஜீவன்மீது உயிர்களின்மீது இரக்கம் கொண்டு அதனை எந்த விதமான துன்பத்திற்கும் உட்படுத்தாமல் நடைபெறுவதே சீவகாருண்யம். இதனை, "தன்னால் முடிந்த உதவியை அனைவருக்கும் செய்தல் வேண்டும் என்பதையும், மக்கள் எல்லோரும் நல்வாழ்வு வாழ ஒருவருக்கொருவர் இரக்க உணர்வோடு உதவுவது சிறந்ததாகும். (கட்டுரைக்களஞ்சியம், ப. 33) என்று நல்லூர் நாகலிங்கன் குறிப்பிட்டுள்ளது இரக்க உணர்வு என்ற மனித நேயப்பண்பிற்கு துணை நிற்கின்றது.

**பசிப்பிணி மருந்தாம்**

உயிர்களின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான தேவைகளுள் முதன்மையாக உணவைக் குறிப்பிடுகிறோம்.